திருச்சிராப்பள்ளி கூடுதல் மாவட்ட ஆட்சியர் கல்லக்குடி கிராம வளர்ச்சி குழுவின் உறுப்பினர்களுடனும், டால்மியா சிமெண்டு கம்பெனியின் பிரதிநிதிகளுடனும், இது சம்பந்தமாக விவாதித்தார். விவாதத்திற்குப் பின்னர் போதிய அளவு குடிநீர் வினியோகம் பற்றிய கோரிக்கையின் மீதும், மற்றுமுள்ள இதரக் கோரிக்கைகளின் மீதும் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப் படும் என உறுதி அளிக்கப்பட்டது. அதன் பின்னர் 28-3-78 அன்று மாலை 5 மணியளவில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. குத்தகைக்கு விடப்பட்டுள்ள தரிசு நிலத்தில் உள்ள கிணற்றி லிருந்து எடுக்கப்படும் தண்ணீருக்கு டால்மியா கம்பெனி தண்ணீர் கட்டணம் ஏதும் செலுத்துவதில்லை எனத் தெரிய வருகிறது. மேற்கூறிய கிணறு அமைந்திருக்கும் நிலத்தின் பகுதியினை மட்டும் கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலத்தின் பகுதியிலிருந்து நீக்குவதற்கான சாத்தியக்கூறுகளை மாவட்ட ஆட்சியர் ஆய்ந்து வருகிறார். அவ்வாறுசெய்வதின் மூலம்அக்கிணறு கல்லக்குடி கிராம மக்களுக்கு நிரந்தர குடிநீர் ஆதாரமாக அமைய முடியும். தேவைப்பட்டால் கம்பெனிக்கும் தண்ணீர் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு தண்ணீர் வழங்க முடியும். மேற்கூறிய ஏற்பாடுகள் மூலம் கல்லக்குடி கிராமத்தின் குடிநீர் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரமான தீர்வு காண முடியும். இதைத் தவிர கல்லக்குடி பேரூராட்சிக்கு ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. தற்சமயம் அவ்விடத்தில் அமைதி நிலவுகிறது.

## (2) கதர் விற்பனை மையங்கள் மூடலும், அதனால் பணியாளர்கள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் கே. சமரசம், திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர். கே. சமரசம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கதர்-கிராமத் தொழில் ஆயத்தின் மூலம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இயங்கிவரும் கதர் விற்பனை மையங்கள் மூடப்படுவது குறித்தும், அதனால் பணியாளர்கள் பாதிக்கப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தமிழ்நாடு - கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தற்பொழுது 171 கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள் இம்மாநிலத்

தில் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் லாபகரமாகச் செயல்படாத 44 விற்பனை நிலையங்களை அவற்றிற்கு அண்மையிலுள்ள கதர் விற்பனை நிலையங்களுடன் இணைத்து அவற்றை பயனுள்ள வகையில் லாபகரமாகவும் திறம்படவும் இயங்கச் செய்ய வேண்டும் என்று வாரியம் தீர்மானித்திருந்தது. எனினும், இது குறித்து மீண்டும் பரிசீலித்தபின் நடப்பு ஆண்டு விற்பனையையும் கவனத்தில் கொண்டு இத்தீர்மானத்தை அமல் படுத்தலாம் என்று வாரியம் முடிவெடுத்துள்ளது. எனவே வாரியத்தின் கீழுள்ள விற்பனை நிலையங்களில் இன்றைய தேதியில் எந்த நிலையமும் மூடப்படவில்லை. அதன் மூலம் எவரும் பாதிக்கப்படவில்லை.

## (8) அரசினர் தீர்மானங்கள் - தொடர்ச்சி

## (ஆ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கை நீண்ட அறிக்கையாக உள்ளது. சென்னை சிறையில் நடந்த கொடுமைகள் பற்றி மிகவும் விவரமாக இருக்கிறது. குறிப்பாக சென்னைச் சிறைச்சாலையிலே நடந்த கொடுமைகள் பற்றி இந்த கமிஷனில் குறிப்பிட்டிருப்பது கடந்த கால ஆட்சிக்கு ஒரு கண்டனம் ஆகும். அன்றைய ஆட்சிக்கு ஒரு எச்சரிக்கையாக இது அமைந்திருக்கிறது. குறிப்பாக, சிறைச்சாலை என்பது—அது கொடுமைகள் நிறைந்து இருக்கிற ஒரு இடம், மனித இதயமற்ற அதிகாரிகள் நடமாடும் ஒரு இடம் என்பதை இந்த அறிக்கையில் பார்க்கிறோம்.

சென்னை சிறைச்சாலை சிப்பாய்க் கலகம் நடந்தபோது கட்டப்பட்டது. அது எந்தவித சீர்திருத்தமும் செய்யப்படாத நிலையில் இருக்கின்றது. மிகப் பெரிய காம்பவுண்டு சுவர் இருக்கக்கூடிய அந்த சிறைச்சாலையை விட்டு ஓடிவிட்டால் என்ன செய்வது என்கிற எண்ணத்தில் அதிகாரிகள் படுக்கப் போகும் முன் ஒரு முறை எண்ணுவது, படுத்த பிறகு ஒரு முறை எண்ணுவது, காலை எழுந்தவுடன் ஒரு முறை எண்ணுவது, ஆக இப்படிப்பட்ட வழக்கங்கள் அதே நடைமுறைகள் வழிவழியாகத் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் அநாகரீகமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசியல் கைதிகளையே இப்படி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சாதாரண குற்றவாளிகளை அதாவது திருடிவிட்டு, கொலை செய்துவிட்டு அங்கே வந்திருப்பவர்களை எப்படி நடத்துவார்கள் என்பதைப் பற்றிச் சொல்லவே முடியாது. ஆகவே